00212

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை – 2020/2021

**EPU 3235** – கலைத்திட்ட கற்கையும் செய்கையும் - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : 21/01/2023 நேரம்: மு.ப 9.30 – மு.ப 11.30

## பகுதி I

1. ‘சுற்றாடல்’ என்பதனால் நீர் கருதுவது யாது? பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக.
2. ‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்’ என்ற பாடம் மற்றைய பாடங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றதென சுருக்கமாக விளக்குக.
3. ‘தொடர்பாடல் என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?
4. ஆரம்ப வகுப்புக்களில் ‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்’ என்னும் பாடத்தில் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தினை குறிப்பிடுக.
5. சுற்றாடல் பாதுகாப்பில் பாடசாலையின் வகிபங்கினை சுருக்கமாக விளக்குக.
6. உயிருள்ளன, உயிரற்றன என்பவற்றை விளக்கி அவற்றுக்கிடையிலான இடைத்தாக்கத்தினை சுருக்கமாக விபரிக்குக.
7. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்தின் வரலாற்று ரீதியான படிமுறை வளர்ச்சியை சுருக்கமாக விளக்குக.
8. தொடர்பாடலுக்கும், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடத்திற்குமிடையிலான இடைத்தொடர்புகளை விமர்சிக்குக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. "இலங்கையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் காற்று மாசுபாடு அதிகரித்திருப்பது இந்தியாவின் தீபகற்பப் பகுதியில் இருந்து அதிக அளவு மோசமான காற்று காரணமாக கூறப்படுகின்றது."

   i. உலகளாவிய சுற்றாடல் எழுவினைகளை பட்டியலிட்டு விளக்குக.
   (10 புள்ளிகள்)

   ii. சுற்றாடலைப் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தினை விளக்குக.
   (10 புள்ளிகள்)

10.

   i. பின்வரும் ஆண்டுகளில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் விருத்தியை விளக்குக.

   அ. 1985
   ஆ. 1993
   இ. 1997

   10 புள்ளிகள்

   ii. ஆரம்ப வகுப்புக்களில் சுற்றாடல் கற்பித்தல் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் ஏதாவது நான்கு (04) தேர்ச்சிகளை பட்டியலிடுக.

   சிறுவர்களிடம் இத்தேர்ச்சிகள் படிப்படியாக எவ்வாறு செயற்பாடுகளினூடாக விருத்தியடைகின்றனவென விளக்குக.
   (10 புள்ளிகள்)

11.

   i. 'சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' என்னும் பாடத்துடன் தொடர்பான தொடர்பாடல் ஆற்றல்களின் அடிப்படை எண்ணக்கருக்களை குறிப்பிடுக.
   (08 புள்ளிகள்)

   ii. தொடர்பாடல் தேர்ச்சிகளை மாணவர்களிடம் விருத்தி செய்வதற்கு பொருத்தமான செயற்பாடொன்றை விபரமாக எழுதுக.
   (12 புள்ளிகள்)

12. 'ஆரம்ப நிலையில் கற்றல்-கற்பித்தலில் கணிப்பீடு-மதிப்பீடு என்பன மிக முக்கிய வகிபங்கினை ஆற்றுகின்றன"

   அ) இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா?
   உமது விடையை நியாயப்படுத்துக.
   (10 புள்ளிகள்)

   ஆ) i. சுற்றாடல் சார்ந்த செயற்பாட்டில் கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றை மேற்கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் நான்கினை (04) பட்டியலிடுக.

   ii. இவ் அம்சங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
   (10 புள்ளிகள்)

13. அ) சுற்றாடலை பாதுகாப்பதில் பாடசாலையின் வகிபங்கினை விபரிக்குக.
(05 புள்ளிகள்)

ஆ) 'வெளி உலகில்' சுற்றுச் சூழலில் பெற்ற அனுபவங்களை பயன்படுத்துவதற்கு பல்வேறு வாய்ப்புக்கள் உள்ளன. இந்தச் சந்தர்ப்பங்களை மூன்று பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

i. இம் மூன்று பிரதான பிரிவுகளையும் பட்டியலிடுக.
(06 புள்ளிகள்)

ii. சுற்றாடல் சார்ந்த தொழிற்சந்தையில் காணப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
(09 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது